## நம்மாழ்வார் அருளிச் செய்த
## திருவாய்மொழி
## ஐந்தாம் பத்து

## ஒன்பதாம் திருவாய்மொழி - மானேய் நோக்கு
## மூன்றாவது. திருக்குடந்தையிலும் பேறு பெறாமல் திருவல்லவாழ் செல்ல ஒருப்பட்ட நாயகி பக்தி பரவச நிலையாலே அவ்வூர்ப் புறச்சோலையில் விழுந்து, தடுக்கும் தோழியர்க்குத் தன் ஆர்த்தியைக் கூறி, 'அந்தத் திருவல்லவாழ்ப் பிரானை என்று அடைவேன்?' என்று கூறும் பாசுரம்

** மானேய் நோக்கு நல்லீர்! * வைகலும் வினையேன் மெலிய *
வான் ஆர் வண் கமுகும் * மது மல்லிகை கமழும் **
தேன் ஆர் சோலைகள் சூழ் * திருவல்லவாழ் உறையும்
கோனாரை * அடியேன் * அடி கூடுவது என்று கொலோ? 1

என்று கொல்? தோழிமீர்காள்! * எம்மை நீர் நலிந்து என் செய்தீரோ? *
பொன் திகழ் புன்னை மகிழ் * புது மாதவி மீது அணவி **
தென்றல் மணம் கமழும் * திருவல்லவாழ் நகருள்
நின்ற பிரான் * அடி நீறு * அடியோம் கொண்டு சூடுவதே 2

சூடு மலர்க் குழலீர்! * துயராட்டியேனை மெலிய *
பாடு நல் வேத ஒலி * பரவைத் திரை போல் முழங்க **
மாடுயர்ந்து ஓமப் புகை கமழும் * தண் திருவல்லவாழ் *
நீடுறைகின்ற பிரான் * கழல் காண்டுங்கொல் நிச்சலுமே? 3

நிச்சலும் தோழிமீர்காள்! * எம்மை நீர் நலிந்து என் செய்தீரோ? *
பச்சிலை நீள் கமுகும் * பலவும் தெங்கும் வாழைகளும் **
மச்சணி மாடங்கள் மீது அணவும் * தண் திருவல்லவாழ் *
நச்சரவு இன் அணை மேல் * நம் பிரானது நன்னலமே 4

நன்னலத் தோழிமீர்காள்! * நல்ல அந்தணர் வேள்விப் புகை *
மைந்நலம் கொண்டு உயர் விண் மறைக்கும் * தண் திருவல்லவாழ் **
கன்னல் அங்கட்டி தன்னைக் * கனியை இன்னமுதம் தன்னை *
என் நலங்கொள் சுடரை * என்று கொல் கண்கள் காண்பதுவே? 5

காண்பது எஞ்ஞான்று கொலொ? * வினையேன் கனி வாய் மடவீர்! *
பாண் குரல் வண்டினொடு * பசுந்தென்றலும் ஆகி எங்கும் **
சேண் சினை ஓங்கு * மரச் செழுங்கானல் திருவல்லவாழ் *
மாண் குறள் கோலப் பிரான் * மலர்த் தாமரைப் பாதங்களே 6

பாதங்கள் மேல் அணி பூந்தொழக் கூடுங்கொல்? * பாவை நல்லீர்! *
ஓத நெடுந்தடத்துள் * உயர் தாமரை செங்கழுநீர் **
மாதர்கள் வாண்முகமும் * கண்ணும் ஏந்தும் திருவல்லவாழ் *
நாதன் இஞ்ஞாலம் உண்ட * நம் பிரான் தன்னை நாள்தோறுமே 7

நாடொறும் வீடு இன்றியே * தொழக் கூடுங்கொல்? நல் நுதலீர்! *
ஆடுறு தீங்கரும்பும் * விளை செந்நெலும் ஆகி எங்கும் **
மாடுறு பூந்தடம் சேர் * வயல் சூழ் தண் திருவல்லவாழ் *
நீடுறைகின்ற பிரான் * நிலம் தாவிய நீள் கழலே 8

கழல் வளை பூரிப்ப யாம் கண்டு * கை தொழக் கூடுங்கொலோ? *
குழல் என்ன யாழும் என்னக் * குளிர் சோலையுள் தேன் அருந்தி **
மழலை வரி வண்டுகள் இசை பாடும் * திருவல்லவாழ் *
சுழலின் மலி சக்கரப் பெருமானது * தொல் அருளே 9

தொல் அருள் நல் வினையால் * சொலக் கூடுங்கொல்? தோழிமீர்காள்! *
தொல் அருள் மண்ணும் விண்ணும் * தொழ நின்ற திரு நகரம் **
நல் அருள் ஆயிரவர் * நலன் ஏந்தும் திருவல்லவாழ் *
நல் அருள் நம் பெருமான் * நாராயணன் நாமங்களே 10

** நாமங்கள் ஆயிரம் உடைய * நம் பெருமான் அடி மேல் *
சேமங்கொள் தென்குருகூர்ச் * சடகோபன் தெரிந்து உரைத்த **
நாமங்கள் ஆயிரத்துள் * இவை பத்தும் திருவல்லவாழ் *
சேமங்கொள் தென்னகர் மேல் * செப்புவார் சிறந்தார் பிறந்தே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---